முருகப்பெருமான் துணை

**மகான் சுக்கிர பகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.12.2023**, திங்கட்கிழமை

1. மாதவ ராஜனே அரங்கா
மக்களை ஞான வழிநடத்த
பூதலத்தில் ஞான வள்ளலாக
புண்ணியம் தனை வகுத்த தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் சுக்கிர பகவானும்
ஆசிதனை சோபகிருது தேள் திங்கள்
ஆற்றல்பட இருபானை திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25 ம் நாள், 11.12.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசியாக
வழங்குவேன் உலகோர் ஞானம் பெற
சோரமிலா அன்னதான நெறி
சுத்த சைவ நெறியுடன் தரும்
4. தருகின்ற அரங்கன் நெறி
தனிப்பெருங் கருணை வடிவான
தருமபலமிக்க ஆறுமுகனார் நெறி
தரணியோர் ஏற்று வருக
5. வருகவே அறிவுத் தெளிவு
வகையிலா மாயை கடந்து
வருங்காலம் தனக்குச் சாதகமாக
வையகம்தனில் ஆன்மா பலம்பெற
6. பலம்பெற பரிபக்குவமும் பெற
பண்பான செயல் முறையுமாக
வலம்வர உலகம் எங்கிலும்
வாய்மை தூய்மை நிரம்ப

7. நிரம்பவே ஞானிகள் பூசையாக
நிலமதனில் தருமம் தழைக்க
அருந்தவசி அரங்கன் காட்டும்
அறநெறியே சிறந்ததென உணரும்
8. உணரும் ஞானம் கூடி
உயர்வான ஞான தீட்சையை
ஞானபண்டிதனின் அவதார
ஞானதேசிகன் மூலம் அடைந்து
9. அடைந்து ஞான வழித் தொடர
அனைத்து வல்லமையும் பெருகி
தடைவெல்லும் ஞானவானாக
தருமனாக ஞானியாக மாற்றம்
10. மாற்றம் கண்டு பேருலகில்
மக்களெல்லாம் அரங்கமகான்
ஆற்றல் மிக்க படைகளாக மாறி
அகிலமதில் அற்புதம் படைப்பர்
11. படைப்பர் ஞானயுகமாற்றம்
படைப்பர் ஞான ஆட்சிதனை
படைவெல்லும் அரங்கன் தலைமையில்
பாடிவந்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—